1992 மார்ச் 25]

352—

போளூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூட கட்டுமானப்பணி.

* 6798—திரு தா. வேடியப்பன் :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) போளூரில் ஒழுங்குமுறை விற்பனைக்கூட கட்டுமானப் பணியை விரைவுபடுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முடிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : போளூரில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடக் கட்டுமானப் பணிகளின் பெரும்பகுதி முடியும் தருவாயில் உள்ளது. விரைவில் கட்டுமானப் பணிகள் அனைத்தும் முடிக்கப்படும்.

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படியானால் கட்டி முடிக்கக்கூடிய இந்த இரண்டு கட்டிடங்களினுடைய மதிப்பீடு எவ்வளவு? அவைகள் அரை குறையாக இருக்கும்போதே, ஒரு கட்டிடத்திலே ஆக்குபேசன் செய்துள்ளதாக எனது தொகுதி மக்கள் என்னிடம் கூறியிருக்கிறார்கள். அதை நிறுத்தி கட்டிட வேலைகள் ஒழுங்காக நடைபெற்ற பிறகு, அதை ஆக்குபை செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மார்ச் 25. கொடுங்கோலர்களின் கொடூரமான தாக்குதலால் புரட்சித் தலைவி அவர்கள் தாக்கப்பட்டு, களங்கம் அடைந்தது இந்தப் பேரவை மட்டுமல்ல, தமிழகமே. களங்கப்படுத்தியவர்கள் ஆட்சிக் காலத்தில் நடைபெறாத திட்டங்கள் எல்லாம் இன்றையதினம் மாண்புமிகு புரட்சித் தலைவி காலத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வேளாண் விளைபொருள்களை ஏலம் விடக் கூடிய கொட்டகை ரூ. 5 இலட்சம் செலவில் பணிகள் முடிக்கப்பட்டு அது பிப்ரவரி மாதம் 92-ல் ஒப்படைக்கப்பட்டது. அலுவலகம் இணைந்த கிடங்கு ரூ. 5 லட்சம் செலவிற்கு பணிகள் தொடரப்பட்டு

வருகிறது. சுற்றுப்புறச் சுவர் ரூ. 2 இலட்சம் செலவில் பணிகள் நடைபெற்று வருகிறது. அந்தப் பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு விரைவிலே அரசிடம் ஒப்படைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண். 353, திரு. மா. சுந்தரதாஸ், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

353—

சென்னை மாநகரத்திலிருந்து மீனம்பாக்கம் வரை நடப்போர் பாதை.

* 2061—திரு. மா. சுந்தரதாஸ் :

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை மாநகரத்திலிருந்து மீனம்பாக்கம் வரை நடப்போருக்கென பாதை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) விவரம் என்ன?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பெடஸ்ரிடியன் ரோடு என்பது முந்தைய அரசினுடைய கொள்கை விளக்கத்திலே இருந்தது. பத்திரிகையிலே கூட நீங்கள் பார்த்திருப்பீர்கள். அதை வைத்துத்தான் இந்தக் கேள்வியைப் போட்டேன். இது பம்பாய் போன்ற மாநகராட்சியிலே செயல்பட்டு வருகிறது. நம்முடைய டிராபிக் நெரிசல் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் இத்தகைய ஃபிளைஓவர் ரோட்ஸ் நம்முடைய சென்ட்ரல் ஸ்டேஷனிலிருந்து மீனம்பாக்கம் வரையில் போட்டால், நிச்சயமாக அந்த

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS